கூடுதல் தலைமைச் செயலர்/
ஆணையர் (வவ)
1 - டிச 2016
எழிலகம், சென்னை-600 005

## சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி – “அச்சம் என்பது மடமையடா” தமிழ் திரைப்படத்திற்கு தஞ்சாவூர், கரூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் கேளிக்கை வரிவிலக்கு அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை

**அரசாணை (டி) எண். 444**

33475

**நாள்: 29.11.2016**
**துன்முகி, கார்த்திகை 14,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2047**
**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (டி) எண்.411, வணிகவரி மற்றும் பதிவு (சி1)த் துறை, நாள் 11.11.2016.
2. திருவாளர்.குரு பில்ம்ஸ் நிறுவனத்தாரின் 29.11.2016–ஆம் நாளிட்ட கடிதம்.

------

**ஆணை:–**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின், பார்வையிட்ட பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை ஏற்று, தேர்தல் நடைபெற்ற தஞ்சாவூர், கரூர் மற்றும் மதுரை மாவட்டங்கள் தவிர்த்து தமிழகத்தின் பிற மாவட்டங்களில், **“அச்சம் என்பது மடமையடா”** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. திருவாளர். குரு பில்ம்ஸ் நிறுவனத்தார் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், **“அச்சம் என்பது மடமையடா”** தமிழ் திரைப்படத்திற்கு, தேர்தல் நடைபெற்ற காரணத்தால் தஞ்சாவூர், கரூர் மற்றும் மதுரை மாவட்டங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படாத நிலையில், மேற்படி திரைப்படத்திற்கு தேர்தல் முடிவடைந்த நாளில் இருந்து தஞ்சாவூர், கரூர் மற்றும் மதுரை மாவட்டங்களுக்கு வரிவிலக்கு அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தஞ்சாவூர், அரவக்குறிச்சி மற்றும் திருப்பரங்குன்றம் ஆகிய தொகுதிகளில் சட்டமன்ற தேர்தல் நடந்து முடிந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு, தேர்தல் நடத்தை விதிகள் முடிவுற்ற நிலையில், தஞ்சாவூர், கரூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் திரையிடப்படும், **“அச்சம் என்பது மடமையடா”** தமிழ் திரைப்படத்திற்கு இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முனைவர் ச.சந்திரமௌலி,
கூடுதல் தலைமைச் செயலாளர் (முகூபொ)

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர்/ வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.

**நகல்:**

சிறப்பு நிலை நேர்முக உதவியாளர்,
அமைச்சர் (வணிகவரி) அலுவலகம், சென்னை–9.
வணிகவரி மற்றும் பதிவு (அநமு) பிரிவு, சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/11/2016

பிரிவு அலுவலர்.